<u>பத்திரிக்கை செய்தி</u>

நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் தாலுக்கா, T-மணியட்டி அஞ்சல், கம்பட்டி கிராமத்தை சேர்ந்த மடியன் மகன் திரு.ம.ஜெயகணேஷ் விவசாயம் செய்து வருகிறார். திரு.ஜெயகணேஷ் அவர்களுக்கு தும்மனட்டி-II கிராமத்தில் சர்வே எண்:824/1A-ல் பூர்வீகமாக 6 ½ செனட் விவசாய நிலம் உள்ளது. அதற்கான சிட்டாவில் வாதி திரு.ஜெயகணேஷ் தனது பெயரை சேர்க்க உரிய ஆவணங்களுடன் ஜனவரி மாதம் இ-சேவை மையம் மூலம் விண்ணப்பித்துள்ளார். பின்னர் வாதி திரு.ஜெயகணேஷ் தும்மனட்டி-II கிராம நிர்வாக அலுவலர் திருமதி.கற்பகம் என்பவரை தும்மனட்டி கிராம நிர்வாக அலுவலகத்தில் சந்தித்து சிட்டாவில் தனது பெயர் சேர்ப்பது பற்றி கேட்டபோது தனக்கு பணம் ரூ.3,000/- தனியாக கொடுத்தால்தான் சிட்டாவில் பெயர் சேர்க்க முடியும் என்று கூறியுள்ளார். திரு.ஜெயகணேஷ் லஞ்சம் கொடுக்காததால் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.கற்பகம் வாதி திரு.ஜெயகணேஷ் அவர்களின் விண்ணப்பத்தை நிராகரித்துள்ளார். அதன் பின்னர் 09.02.2024-ம் தேதி திரு.ஜெயகணேஷ் சிட்டாவில் தனது பெயரை சேர்க்க இ-சேவை மையம் மூலம் மீண்டும் விண்ணப்பித்துள்ளார். பின்னர் வாதி திரு.ஜெயகணேஷ் தந்தையின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் இணைக்கப்படவில்லை என்று கூறி 21.02.2024-ம் தேதி கிராம நிர்வாக அலுவலர் திருமதி.கற்பகம் விண்ணப்பத்தை நிராகரித்த விவரம் குறுஞ்செய்தி மூலம் வாதியின் அலைபேசிக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்பின் வாதி திரு.ஜெயகணேஷ் தனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு சம்மந்தமாக கேட்பதற்காக தனது செல்போனிலிருந்து கிராம நிர்வாக அலுவலர் திருமதி.கற்பகம் அவர்களை பலமுறை தொடர்பு கொண்டபோதும் வாதி அழைப்புகளை எடுக்காததால் 03.04.2024-ம் தேதி தனது நண்பரின் செல்போன் மூலம் கிராம நிர்வாக அலுவலரை தொடர்பு கொண்டபோது அழைப்பை ஏற்ற திருமதி.கற்பகம் அவர்களிடம் தனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது குறித்து கேட்டபோது, திருமதி.கற்பகம் வாதி திரு.ஜெயகணேஷ் அவர்களிடம் ஊட்டி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஜங்ஷனுக்கு வர சொல்லியுள்ளார். அதன்படி மதியம் சுமார் 03.30 மணியளவில் கல்லூரி ஜங்ஷனுக்கு அருகில் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.கற்பகம் அவர்களை சந்தித்து சிட்டாவில் தனது பெயர் சேர்ப்பது சம்மந்தமாக கேட்டுள்ளார். அதற்கு திருமதி.கற்பகம் அவர்கள் ஏற்கனவே பணம்

கொடுக்காததால்தான் விண்ணப்பத்தை ரிஜக்ட் செய்தேன் என்றும் மீண்டும் விண்ணப்பித்தால் நான் சிட்டாவில் பெயர் சேர்க்க ஏற்பாடு செய்து தருகிறேன். ஆனால் நீங்கள் பணம் தர வேண்டும் என்று சொல்லியுள்ளார். அப்போது வாதி திரு.ஜெயகணேஷ் எனது உறவினர் திரு.குமார் என்பவரின் விண்ணப்பமும் உள்ளது அவருக்கும் சிட்டாவில் பெயர் சேர்க்க வேண்டும் என்று கேட்டுள்ளார். அதற்கு திருமதி.கற்பகம் அவர்கள் இரண்டு விண்ணப்பங்களுக்கும் சேர்த்து தனக்கு தனியாக ரூ.8,000 கொடுத்தால் சிட்டாவில் பெயர் சேர்க்க ஏற்பாடு செய்ய முடியும் என்று கூறியுள்ளார். அதற்கு வாதி தன்னால் அவ்வளவு பணம் ஏற்பாடு செய்ய முடியாது என்று சொன்னதற்கு திருமதி.கற்பகம் அவர்கள் ரூ.2,000 குறைத்துகொண்டு விண்ணப்பம் ஒன்றிற்கு தலா ரூ.3,000 வீதம் இரண்டு விண்ணப்பங்களுக்கு ரூ.6,000 கொடுத்தால்தான் விண்ணப்பத்தை பரிந்துரை செய்து மண்டல துணை வட்டாட்சியர் அவர்களுக்கு அனுப்புவேன், இல்லையென்றால் ஏதாவது காரணம் சொல்லி மீண்டும் விண்ணப்பங்களை ரிஜெக்ட் செய்து விடுவேன் என்று கண்டிப்புடன் கூறி நாளை 04.04.2024-ம் தேதி மீண்டும் இ-சேவை மையத்தில் விண்ணப்பித்துவிட்டு தன்னை தொடர்பு கொள்ளும்படி கூறியுள்ளார். வாதி திரு.ஜெயகணேஷ் அவர்கள் 04.04.2024-ம் தேதி இ-சேவை மையத்தில் விண்ணப்பித்துவிட்டு கிராம நிர்வாக அலுவலர் திருமதி.கற்பகம் அவர்களை தொடர்பு கொண்டுள்ளார். திருமதி.கற்பகம் அவர்கள் கூறியபடி இன்று 05.04.2024-ம் தேதி ஊட்டி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஜங்ஷனில் வைத்து வாதி திரு.ஜெயகணேஷ் அவர்களிடம் பணம் ரூ.6,000-ஐ லஞ்சமாக கேட்டு பெற்று அதை தனக்கு வழக்கமாக வாகனம் ஓட்டி வரும் தூனேரி கிராமத்தை சேர்ந்த திரு.சதீஷ் குமார் என்பவரிடம் கொடுத்தபோது நீலகிரி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவினரால் கையும் களவுமாக இருவரும் கைது செய்யப்பட்டனர்.